அசல் வழக்கு எண். 74/2017

| | |
|---|---|
| திருமதி | மல்லிகா |
| வயது | 46 |
| க/பெ. | சின்னப்பா |
| ஊர்: | சீனிவாசபுரம் |

24.03.2023

வா.சா.2

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நானும் எனது கணவரும் இவ்வழக்கினை சர்வே எண் 197/44-ற்கு உண்டான சொத்திற்குத்தான் தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண் 197/20-ற்கு உட்பட்ட சொத்தின்மீது நாங்கள் எந்தவிதமான உரிமையும் கோரவில்லை. அதில் எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. சர்வே எண் 197/20 வண்டிப்பாதை என்றால் சரியல்ல.

2. எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தின் சர்வே எண் 197/44 கன்னி கோயில் தெருவின் தெற்குப் பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல. கன்னிக்கோயில் தெருவில் சர்வே எண் 197/20-ற்கு உட்பட்ட இடத்தில் கன்னிக்கோயில் தெரு நடுவில் நான் வீடு கட்ட முயற்சித்ததால்தான் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் வழிப்பாதை சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. சர்வே எண் 197/44 நிலத்தின் பட்டா எனது பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், சர்வே எண் 197/45-க்கு பட்டா எனது கணவரின் சகோதரர் மனைவியான கோகிலா என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், சர்வே எண் 197/46-க்கு பட்டா ஏழுமலை மகன் ஜெயப்பால் என்பவரது பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், சர்வே எண் 197/44, 197/45 மற்றும் 197/46 ஆகியவை அனைத்து ஒரே வரிசையில்தான் உள்ளது என்றால் சரிதான்.நான் கட்டும் வீடு சர்வே எண் 197/44, 197/45 மற்றும் 197/46-ன் எதிர்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் மேற்குப் பக்கத்தில் முனியம்மாள் என்பவரின் வீடு உள்ளது.

4. முனியம்மாளின் வீட்டின் சர்வே எண் எனக்குத் தெரியாது. எனக்கு கொடுக்கப்பட்ட பட்டாவிற்கு உட்பட்ட நிலம் சர்வே எண் 197/44-ல் நான் வீடு கட்டாமல் கன்னிக்கோயில் தெருவின் வடக்குப் பக்கத்தில் சர்வே எண் 197/20 புறம்போக்கு நிலத்தில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வீடு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளபடியால் ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கு எனக்கு அறிவிப்பு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை.

5. நான் கட்டியுள்ள வீட்டிற்கும் எனக்கு பட்டா கொடுக்கப்பட்ட சர்வே எண் 197/44-க்கும் நடுவில் கன்னிக்கோயில் தெரு உள்ளது என்றால் சரியல்ல. வேறு வழிப்பாதை உள்ளது. கன்னிக்கோயில் தெருவில் ஆக்கிரமிப்பு செய்து நான் வீடு கட்ட முயற்சித்தபோது என்னை தடுத்தார்கள் ஆகையால்தான் இந்த பொய்யான வழக்கை நான் தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டிய வீட்டினை அரசாங்க அதிகாரிகளால் ஆக்கிரமிப்பு உள்ளதாகக் கருதி கட்டப்பட்டுள்ள சுவற்றினை அகற்றி சிமெண்ட் சாலை அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அதிகாரிகள் எதுவும் அகற்றவில்லை, வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் அந்த இடம் சாலை அமைப்பதற்கு ஒதுக்கப்படவில்லை என்று எனக்கு தெரிவித்துள்ளார்கள் அந்த ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன்.

7. ஆக்கிரமிப்பு செய்ததுகுறித்து என்மீது புகார் கொடுக்கப்பட்டு எனது பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் கொடுத்த புகாரின்மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நான் சிறைக்குச் சென்றுள்ளேன் என்றால் சரியல்ல.

8. சர்வே எண் 197/20-ல் நான் வீடு கட்டியுள்ளேன், சர்வே எண் 197/44-ல் நான் வீடு கட்டியுள்ளேன். சர்வே எண் 197/44-ல் நான் மின் இணைப்பு பெறவில்லை என்றால் சரியல்ல, பெற்றுள்ளேன். சர்வே எண் 197/20-ல் நான் மின் இணைப்பு பெற்றுள்ளேன், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மின்சார உபயோக கட்டண ரசீதுகள் அனைத்தும் சர்வே எண் 197/20 சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு உண்டான ரசீதுகள் என்றால் சரியல்ல, இரண்டு வீட்டிற்கும் சேர்ந்ததாகும்.

9. சர்வே எண் 197/44-ல் உள்ள நிலம்தான் எனக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடம், அதன் அனுபவத்தின்மீது அரசாங்கமோ இவ்வழக்கின் பிரதிவாதிகளோ எந்தவிதமான இடையூறுகளும் செய்யவில்லை, நான் சர்வே எண் 197/20-ற்கு உண்டான இடத்தினை தவறுதலாக எனக்கு ஒதுக்கப்பட்டு இடம் என்று கோரி வீடு கட்ட முயற்சித்ததால்தான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல, எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் நான் வீடு கட்டியுள்ளேன். நான் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை.